முருகப்பெருமான் துணை

**மகான் புதபகவானை தொடர்ந்து**
**மகான் சுக்கிர பகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.06.2021, சனிக்கிழமை

1. தயாள சக்தி கொண்ட நல்
தவராசனே ஆறுமுக அரங்கனே
நேயமுடன் மக்களை காக்க
நீ கொண்டுள்ள சன்மார்க்கமே
2. சன்மார்க்கமே உயர் கொள்கையென
சாற்றியே யோகபிரசன்ன ஆசி
நன்மைகருதி பிலவ மிதுன திங்கள்
நாட்டிடுவேன் வியதிகதி காரி வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 12ம் நாள், 26.06.2021 சனிக்கிழமை)
3. வாரம்தனில் சுக்கிர பகவான் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரம் போக்கி மக்களை மீட்க
சுப்பிரமண்யர் ஞானம் அருளி
4. அருளி காக்கும் அரங்கன் வழிகாட்டலை
அகிலத்தார் ஏற்று வருக
இருள் எனும் உலக நடப்புகள்
இனியும் தொடரா அகன்றோடும்
5. அகன்றோடி மக்களுக்கு பாதுகாப்பான
அனைத்துச் சூழல்களும் உருவாகும்
செகத்தில் தருமம் வளர்த்து
சேவை கொண்டே மாற்றம் தரும்
6. மாற்றம் தரும் இந்த அற்புதம்
மண்ணுலகில் சடுதி நிகழும்
தேற்றம் தந்து அருள் பொருளுடன்
தெயவ்பலம் கூட்டி அருளும்
7. அருளும் உண்மை நெறிதனை
அகிலம் எங்கிலும் ஆற்றல்பட
அருளாக பரவச் செய்து வர
அனைத்துமே மாற்றம் காணும்
8. காணவே பிரணவக்குடில் தன்னை
கலியுகத்தார் அனுகி வந்து
ஞான தீட்சைதனை அடைந்து
நாளும் செபதபம் செய்துவர
9. செய்துவர சிக்கல்கள் விலகி
செயல்பாடுகள் யாவும் வெற்றி தரும்
அய்யமில்லா சகலவழிகளும் சிறந்து
ஆபத்து பேரிடர் இடைகண்டமில்லா

10. கண்டமில்லா ஆயுள் கூடி
கலியுகத்தார் உயர்நிலை அடைவர்
உண்டான கலியுகம் தனையே
உயர்வாய் மாற்றும் சக்தி கூடி

11. கூடியே ஞானயுகம் படைக்கவல்ல
குருராசன் உருவாக்கும் ஞானிகளாகி
நாடியே உலகோர் ஞான ஆட்சி
நன்மைபடவே புரிந்து சிறப்பர்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–